TAMIL NADU LEGISLATURE LIBRARY
2 AUG 1973
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றம்

திங்கட்கிழமை, 1973 ஏப்ரல் 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் [திரு. சி. பி. சிற்றரசு] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்

Selection Grade Post

* 321. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the service of the Secondary Grade Teachers who worked in the Panchayat Union Schools was taken into account for Selection Grade when they were taken into the Government (Board) High Schools; and

(*b*) if not, the reasons therefor?

தேர்வுத்தரப் பதவி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி புரிந்த இடைநிலைத் தர ஆசிரியர்களின் பணிநிலை, அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிய அந்த ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவர்கள் பணி தேர்வுத்தரப் பதவிக்கு கணக்கிலெடுத்துக்கொள்ளப்பட்டதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை; பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலிருந்து அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்கு, அவ்வாறு அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்துதான் முதுநிலை உரிமை வழங்கப்படுகிறது.

(இ) பஞ்சாயத்து யூனியனின் கீழ் அத்தகைய இடைநிலை ஆசிரியர்கள் ஆற்றிய பணிக்காலத்தைக் கணக்கிட்டு முன்னிடம் வழங்கினால் அது ஏற்கனவே கழக உயர்நிலைப்பள்ளிகளில் பணியிலிருப்போரின் முதுநிலையைப் பாதிக்கும்; நிரந்தரமாக பணியிலிருப்பவர்களிடமிருந்து முடிவில்லாத மேல் முறையீடுகளுக்கும் வழி வகுக்கும்.